வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தம்பிமுகமது சாதிக் இயற்கை எய்தினார்.அவரது உடலுக்கு மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநில கொள்கை பரப்பு செயலாளர் காஞ்சிபுரம் எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய கழக செயலாளர் சி.எல்.ஞான சேகரன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகியின் சகோதரர்

வேலூர் முன்னாள் துணை மேயர் தி.அ.முகமதுசாதிக் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் – முகம்மது சகிக்கு ஆறுதல்!

வேலூர், மே,11

வேலூர் மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி அவர்களின் தம்பியும், வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயருமான தி.அ.முகமது சாதிக் நேற்று (10.05.2025-சனிக்கிழமை) நடந்த சாலை விபத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

தகவல் அறிந்து துயருற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலூர் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி அவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயர் மறைந்த தி.அ. முகமது சாதிக் பாஷா, 35 வருடங்களாக வழக்கறிஞராகப் பணியாற்றியவர் . 25 வருடங்களாக ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியவர். பொதுக்குழு உறுப்பினராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டவர்.

வேலூர் மாநகர முதல் துணை மேயராகப் பணியாற்றியவர். தேர்தல் காலங்களில் தேர்தல் பொறுப்பாளராக,சிறப்பாக பணியாற்றியவர். கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டவர். முகமது சாதிக் அவர்களின் மறைவு, வேலூர் மாவட்டக் கழகத்திற்குப் பேரிழிப்பு எனின் அது மிகையல்ல!

மறைந்த தி.அ .முகமது சாதிக் அவர்களுக்கு மனைவி பஸ்நஜ்முன்னிசா, தி.ச. முகமது சித்தீக் அனீப், (பல் மருத்துவர்), எனும் மகனும் தி.ச. சாதியா ஜைனப், (எம்.பி .பி.எஸ். மருத்துவர்) எனும் மகளும் உள்ளனர்.

அமைச்சர் ஆர்.காந்தி – கழகத்தினர் அஞ்சலி

மறைந்த தி.அ.முகமது சாதிக் உடலுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, அஞ்சலி செலுத்தினார்.

மேலும் வட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார்எம்எல்ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த்,மாநில கொள்கை பரப்பு செயலாளர் காஞ்சிபுரம் எழிலரசன் எம்.எல்.ஏ., மாநகரசெயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., திருவண்ணாமலை மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் எ.வ.கம்பன், திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்எல்ஏ, நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல், ஆம்பூர் நகராட்சி தலைவர் ஏஜாஸ்அகமது,

மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், நகராட்சி தலைவர் சவுந்தரராஜன், துணை மேயர் எம். சுனில்குமார் , ஒன்றிய கழக செயலாளர்கள் சி. எல்.ஞான சேகரன், தணிகாசலம்,கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகி கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் பீடு நடை போட வைத்த முதல்வர்!

இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடு - மக்கள் மகிழ்ச்சி!

“தினத்தந்தி” தலையங்கத்தில் பாராட்டு மழை!

சென்னை, மே 11-

தமிழ்நாட்டை பீடு நடை போட வைத்து இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முதல் இடம் கிடைக்க பாடுபட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ‘தினத்தந்தி’ நாளேடு மக்கள் சார்பில் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

ஆட்சி பயணத்தில் 4 ஆண்டுகள்சட்டமன்ற தேர்தலை சந்திக்க இன்னும் ஒரு ஆண்டுதான் இருக்கிறது 2021ல் நடந்த சட்டமன்ற தேர்தலில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. மகத்தான வெற்றி பெற்று மகுடத்தை சூட்டியது. இந்த வெற்றிக்கு முழு, முழுக்காரணம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வித்தியாசமான பாணியில் நடத்திய பிரசாரமும், தேர்தல் அறிக்கையில் அவர் கொடுத்த 505 வாக்குறுதிகளும்தான். ஆட்சி பொறுப்பை ஏற்ற முதல் நாளிலேயே அதாவது மே மாதம் 7ந்தேதி 5 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டுத்தான் அவர் தனது பணியை தொடங்கினார்.



தலையங்கம்

தினத்தந்தி

10.5.2025 (சனிக்கிழமை)

ஆட்சி பயணத்தில் 4 ஆண்டுகள்

அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதி முதல் தவணையாக மே மாதமே ரூ.2 ஆயிரம் வழங்கப்படும். 16. 5.2021 முதல் ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்படுகிறது. சாதாரண கட்டண நகர பஸ்களில் மகளிர் அனைவரும் கட்டணமின்றி பயணிக்கலாம். மக்களிடம் பெற்ற மனுக்கள் மீதான குறைகளை நிவர்த்தி செய்ய உங்கள் தொகுதியில் முதல்அமைச்சர் என்ற திட்டத்தை செயல்படுத்த புதிய துறை உருவாக்கப்படுகிறது. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் தனியார் ஆஸ்பத்திரிகளில் அரசின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை பெறலாம் என்ற முத்தான 5 அறிவிப்புகள் நடைமுறைக்கு வந்தன.

அதன்பிறகு அவர் தேர்தல் அறிக்கையில் சொன்னதையும், சொல்லாததையும் பல அறிவிப்புகளாக வெளியிட்டு தமிழ்நாட்டை வளர்ச்சிப்பாதையிலும், சமூகநல பாதைகளிலும் முன்னோக்கி வேகமாக அழைத்துச்சென்றார். கடந்த 7 ந்தேதி அவருடைய ஆட்சி 4 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து 5வது ஆண்டில் அடியெடுத்து வைத்தது. ‘நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு’ என்று தமிழக அரசின் சார்பில் மிக பெருமிதமாக அரசு நிறைவேற்றிய பல சாதனைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இல்லத்தரசிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், முதல்அமைச்சரின் காலை உணவு திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், முதலீட்டாளர்களின் முதல் முகவரி, நான் முதல்வன் திட்டம், இலவச மின்சார திட்டங்கள் என்று பல திட்டங்களை அரசு பெருமையோடு கூறினாலும், பொருளாதார வளர்ச்சியில் 9.69 சதவீதத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் இடத்தில் இருப்பதுதான் இந்த அரசின் மிகவும் உயரிய சாதனையாகும்.

தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.17.23 லட்சம் கோடியை அடைந்து இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதல் இடத்துக்கு கொண்டு வந்துள்ளது. பதிவுத்துறையில் கிடைத்த வருமானம் கடந்த ஆண்டைவிட இரட்டிப்பாகி ரூ.21 ஆயிரத்து 968 கோடியாகியிருக்கிறது. இதனால் மக்களின் சொத்து வாங்கும் திறன் அதிகரித்து இருக்கிறது என்பதை அறியலாம். தனிநபர் வருமானத்தை பொறுத்தமட்டில் தேசிய சராசரி வருமானம் ஆண்டுக்கு ரூ.2.60 லட்சமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் ரூ.3.58 லட்சமாக இருக்கிறது. இதுமட்டுமல்லாமல் உற்பத்தியிலும் தமிழ்நாடு பெரும் உயர்வை கண்டுள்ளது. இவ்வாறு அனைத்து துறைகளிலும் தமிழ்நாட்டை பீடு நடை போட செய்துள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, அடுத்த சட்டமன்ற தேர்தலை சந்திக்க இன்னும் ஒரு ஆண்டுதான் இருக்கிறது. இந்த சூழ்நிலையில், இந்த ஆண்டு மேலும் பல அறிவிப்புகள் அடுத்தடுத்து வரும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் இருக்கிறது.

இவ்வாறு ‘தினத்தந்தி’ நாளேடு தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் முதல்வருக்கு தெரிவித்துள்ளது.

வேலூர் முன்னாள் துணைமேயர்

தி.அ.முகமது சாதிக் மறைவு!

வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அஞ்சலி!

வேலூர், மே 11- வேலூர் முன்னாள் துணை மேயர் தி.அ.முகமது சாதிக்கின் மறைவுக்கு வேலூர் மாவட்டக் கழகம் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் என, மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்ட அவைத்தலைவர் முன்னாள் எம்.பி. தி.அ.முகமது சகியின் அன்பு சகோதரரும் வேலூர் மாநகராட்சி முன்னாள் துணை மேயரும் முன்னாள் பொது குழு உறுப்பினருமான தி.அ.முகமது சாதிக் அவர்கள் மறைவெய்தினார் என்பதை தெரிவித்துக் கொண்டு அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தெரிவித்தார்.

செஞ்சி சட்டமன்ற தொகுதி செஞ்சி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நல்லான் பிள்ளை பெற்றால் ஊராட்சியில் நடைபெற்ற நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் கவிஞர் காசி முத்துமாணிக்கம், விஜயகுமார், மொக்தியார் அலிமஸ்தான், பச்சையப்பன், விஜயராகவன், ஜெயபாலன், மணிவண்ணன், கதிரவன் உள்ளிட்டதி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

சிலந்தி கட்டுரைகள்!

ம.தி.மு.க...“சங்கொலி”யின் மதிப்பீடு!

நம் நினைவில் வாழும் முரசொலி செல்வம் அவர்களின் பிறந்தநாளில் முரசொலியில் ‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய 151 கட்டுரைகளை தொகுத்து, தி.மு.க. இளைஞர் அணி, முத்தமிழறிஞர் பதிப்பக வெளியீடாக எழில் கொஞ்சும் நூலை வரலாற்று ஆவணமாக வெளியிட்டுள்ளது.

நூலின் உள்ளே, நுழை வாயிலில் இடம்பெற்றுள்ள புன்முறுவல் பூத்த முரசொலி செல்வம் அவர்களின் கம்பீரமான புகைப்படம், அவரை நேரில் பார்க்கும் உணர்வை நமக்கு அளிக்கிறது.

“‘சிலந்தி’ என்ற பெயரால் அவர் எழுதிய கட்டுரைகள் அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது. பொதுவாக சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம்

ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும்; யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்த அளவிற்கு வலிமையான வாதங்களை வன்மையான எழுத்துக்களால் வைத்து வந்தார்.

அவர் எழுதிய இக்கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை!

ஆறு ஆண்டுகால அரசியல் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்லாண்டு கால அரசியல் இதனுள் இருக்கிறது. சரியானதை அடையாளம் காட்டுகிறார். தவறானவர்களை அம்பலப் படுத்துகிறார்.

கதை சொல்லும் பாணியில் எழுதி இருப்பதால் இவை படிக்கச் சுவையாகவும் இருக்கின்றன.

அவரதுஎழுத்துக்கள் எப்போதும் சூடானவை அதே நேரத்தில் சுவையானவை. அன்றாட அரசியலைத் தான் விமர்சிப்பார். அதே நேரத்தில் கடந்தகால அரசியலை நினைவூட்டுகிறார். குத்தல் இருக்கும். அதே நேரத்தில் யார் மனதையும் இரணப்படுத்தாது. எல்லோரும் அறிந்து கொள்ள அவரது கட்டுரைகளில் ஏராளமான தகவல்கள் நிறைந்து கிடக்கும்” என்ற தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு அரசின் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அருமையான அணிந்துரை, கரம் பிடித்து நூலின் உள்ளே வாசகர்களை அழைத்துச் செல்கின்றது. அணிந்துரையை அடுத்து, ‘முரசொலி செல்வம் வாழ்க்கைத்தடம்’ என்ற ஏழு பக்கங்கள் கொண்ட கட்டுரை, முரசொலி செல்வம் அவர்களின் வரலாறு, எழுத்தாற்றல், அடக்குமுறையை எதிர்கொண்ட அவருடைய துணிச்சல் ஆகியவைகளை படம் பிடித்துக் காட்டுகிறது.

முரசொலியில் 2019 ஆம் ஆண்டில் எழுதிய 32 கட்டுரைகள், 2020 ஆம் ஆண்டில் எழுதிய 17 கட்டுரைகள், 2021 ஆம் ஆண்டில் எழுதிய 13 கட்டுரைகள், 2022 ஆம் ஆண்டில் எழுதிய 36 கட்டுரைகள், 2023 ஆம் ஆண்டில் எழுதிய 27 கட்டுரைகள், 2024 ஆம் ஆண்டில் எழுதிய 25 கட்டுரைகள் ஆகியவைகள் தொகுக்கப்பட்டு, காலப்பெட்டகமாக, கருத்துக் கருவூலமாக இந்நூல் மின்னி மிளிர்கிறது! ஒவ்வொரு கட்டுரையிலும் இடம்பெற்றுள்ள புகைப்படங்கள் நம்மை கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கின்றன. வரலாற்று நிகழ்வுகள் திரைப்படக் காட்சிகளாய், நம் நெஞ்சில் மலர்ந்து மணம் வீசுகின்றன!

“முடியட்டும் மதவெறி! விடியட்டும் நல்லிணக்கம்! ‘புனைச் செய்திகளை பொடிப் பொடியாக்குவோம்!’ ‘நாணலாய் வளைகிறீர்களா? நாணயத்துக்கு வளைகிறீர்களா?’

‘காலத்தை வென்றவன் நீயே!’

‘கொக்கென்று நினைத்தாரோ தமிழக ஆளுநர் ரவி!’ ‘ரொட்டி இல்லையா? கேக் சாப்பிடுங்கள்!’ ‘ஊசியில் ஓட்டை என்று சல்லடை கேலி பேசுவதா?’

தென்றல் அல்ல நாங்கள்; புயல் என அறிவீர்! சாதிய, சதிகார அரசியலுக்கு சம்மட்டி அடி தாரீர்!” என நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளின் ஒவ்வொரு தலைப்புமே நம்மை சுண்டி இழுக்கின்றன; படிக்கத் தூண்டுகின்றன!

திருவாரூர் புலிவலத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தின் சிறப்பில் தொடங்கி, துணை முதல்வரின் தி.மு.க. சின்னம் தொடர்பாக, அரசு விழாவில் காவி உடையில் வலம் வரும் உ.பி. முதல்வர்; அ.தி.மு.க. கரைவேட்டியுடன் கலந்து கொண்ட எம்.ஜி.ஆர்., எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர்களை அம்பலப்படுத்தும் சிலந்தியின் பதில் என நூலின் ஒவ்வொரு பக்கமும் கருத்து வளம் நிரம்பியவை.

நூல் வெளிவர துணை நின்றோர் அனைவரையும் ‘சங்கொலி’ பாராட்டி வாழ்த்துகிறது! வரலாற்று ஆவணமாய்த் திகழும் சிலந்தி கட்டுரைகளை தமிழ் மக்கள் வாங்கிப் படித்து பரப்பிட முன்வர வேண்டும் என்று ‘சங்கொலி’ விழைகிறது!

ஆ.வந்தியத்தேவன்

–நன்றி ‘சங்கொலி’

9.5.2025

ஒன்றிய அரசின் பணிகளுக்கு 58 பேர் தேர்ச்சி!

மீண்டும் சாதித்த ‘நான் முதல்வன் திட்டம்’!

சென்னை, மே 11-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுக்கென தனிப்பிரிவு துவங்கப்பட்டு வைக்கப் பட்டது. அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலை வாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அதன் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக, ஒன்றிய பணியாளர் தேர்வாணையம், ரயில்வே மற்றும் வங்கிப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு உண்டு, உறைவிட வசதியோடு கூடிய தரமான ஆறுமாத காலப் பயிற்சி கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

நான் முதல்வன் திட்டம் மூலம் பயிற்சி மேற்கொண்ட மாணவர்களில், கடந்த 2024ம் ஆண்டு அக்டோபர் முதல் கடந்த ஏப்ரல் மாதம் வரை நடைபெற்ற ஒன்றிய அரசின் பணிகளுக்கான தேர்வில் 58 பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக திறன் மேம்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது. எஸ்.எஸ்.சி. மற்றும் ரயில்வே பணிகளுக்கான தேர்வில் 21 மாணவர்களும், வங்கி பணிகளுக்கான தேர்வில் 37 மாணவர்களும் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த மாதம் வெளியான இந்திய குடிமைப் பணி தேர்வு வெளியீட்டில் நான் முதல்வன்” திட்டத்தில் பயிற்சி பெற்ற 50 மாணவ - மாணவிகள் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து எஸ்எஸ்சி, ரயில்வே மற்றும் வங்கி பணிகளுக்கு நடைபெற்ற ஒன்றிய அரசின் பணிகளுக்கான தேர்வில் தமிழக மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். சென்னை, சேலம், விருதுநகர் ஆகிய நகரங்களில் மாணவ-மாணவிகளுக்கு இலவச பயிற்சி வழங்கப்பட்டது.

நடப்பாண்டில் சென்னை, கோவை, மதுரை ஆகிய நகரங்களிலும் நான் முதல்வன் திட்டம் மூலம் பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் பணிகளில் தமிழக மாணவர்கள் தேர்ச்சி குறைந்த காரணத்தால் கடந்த ஆண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த ஆண்டு நடைபெறும் ஒன்றிய அரசின் பணிகளுக்கான தேர்வில் பயிற்சி பெற https://portal.naanmudhalvan.tn.gov.in/competitive_exams என்ற இணையத்தில் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ள மாணவர்கள் வருகிற 13ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் பெருமிதம்

‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று ஒன்றிய அரசின் SSC, ரயில்வே மற்றும் வங்கி பணிகளுக்கு நடந்த தேர்வில் 58 பேர் தேர்ச்சி பெற்றதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு: நாள்தோறும் சாதனைகள் படைக்கும் திராவிட மாடல் என்றேன்; இன்றைய சாதனை இது! நம் தமிழ்நாட்டு மாணவர்கள் ஒன்றிய அரசின் போட்டி தேர்வுகளில் இன்னும் நிறைய தேர்ச்சி பெற்று, உயர் பொறுப்புகளில் சாதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நெய்வேலி சட்டமன்ற தொகுதியில்

ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்டப் பணிகள்!

சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்!!

கடலூர், மே 11 -

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி வடக்குத்து ஊராட்சி சந்தைவெளி பேட்டை கிராமத்தில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் நாடக கலையரங்க கட்டிடம், ரூபாய் 17.25 மதீப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் , கோரணப்பட்டு கிராமத்தில் ரூபாய் 17.25 மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் ஆகியவை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது.

இதில் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

அப்போது சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ., பேசுகையில் மனதுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் நிறைவேற்றப்படுகிறது என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், மாவட்ட பிரதிநிதிகள் இராம. வெங்கடேசன், கோவிந்தராஜ், இன்ஜினியர் அனுஜா, குறிஞ்சிப்பாடி ஒன்றிய செயற்குழு உறுப்பினர் கல்யாண சுந்தரம், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பாக்கியலட்சுமி, முன்னாள் ஊராட்சி மன்ற துணை தலைவர் சடையப்பன், சந்தைவெளிப்பேட்டை தி.மு.க. நிர்வாகிகள் வைத்தியநாதன், ஞானவேல், தனசங்கு, அழகேசன், லோகநாதன், சதீஷ், சிவனேசன், பட்டுசாமி, சிவமணி, வேல்முருகன், அகிலேஷ், கோரணப்பட்டு நிர்வாகிகள் தனசேகர், ராஜதுரை, இ.பி. தனசேகர், வேல்முருகன், காசிலிங்கம், சிவராமகிருஷ்ணன் வடக்குத்து ஊராட்சி செயலர் சிவகுமார் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்குத்து ஊராட்சி சந்தைவெளிபேட்டை கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டும் பணியை சபா ராஜேந்திரன் எம்.எல்.ஏ., தொடங்கி வைத்தார்.